# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை


## 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2015.03.30 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


# உண்ணாட்டரசிறை (திருத்தம்)

**உண்ணாட்டரசிறை சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நிதி அமைச்சர் அவர்களினால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 38.00** **தபாற் செலவு : ரூபா 30.00**

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 7ஆம் பிரிவைத் திருத்துவதுடன்,திருத்தப்பட்டவாறானஅப்பிரிவின் சட்டப்பயனானது, இலங்கை நீரிழிவுக் கழகத்தை வருமானவரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிப்பதற்கும் மற்றும் அப்பிரிவிலுள்ள பிழையொன்றைத் திருத்துவதற்குமானதாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, தொழில்தருநரினால் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடனிலிருந்தான நன்மையை விலக்களிப்பதற்கானதாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறானஅப்பிரிவின் சட்டப்பயனானது, 60 வயதினராகவுள்ளவரும் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டவராகவுள்ளவருமான தனியாளொருவரின் வட்டிவருமானத்துக்கு விலக்களிப்பின் ஏற்புடைமையை விசாலிப்பதற்கானதாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஏற்றுமதிக்காக உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கான புதிய பொறுப்புமுயற்சியினால் செலுத்தப்பட்ட பங்கிலாபத்துக்கு விலக்களிப்பை விசாலிப்பதற்கானதாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது,-

(அ) சர்வதேச விழாக்களில் விருதுகளை வெற்றியீட்டுகின்ற திரைப்படங்களுக்கு அல்லது நாடகங்களுக்குச் சலுகை வழங்குவதற்கானதாகும்;

(ஆ) இலங்கையிலுள்ள தகவல் தொழினுட்பவியல் அல்லது தொழிற் செயன்முறைகள் வெளிமூலக் கம்பெனியிலிருந்து அரசுரிமைப்பணம் என்றவகையாக ஈட்டப்பட்ட இலாபங்களுக்கு விலக்களிப்பதற்கானதாகும்;

(இ) அமெரிக்க டொலர் வைப்பிலிருந்து அல்லது வெளிநாட்டுப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை நிலையங்களில் நிரற்படுத்தப்பட்ட அமெரிக்க டொலரில் பெயரிடப்பட்ட பிணையங்களிலிருந்து கூறுநம்பிக்கைப்பொறுப்புகளின் இலாபங்களுக்கு விலக்களிப்பதற்கானதாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறானஅப்பிரிவின் சட்டப்பயனானதுபின்வருவனவற்றுக்கானதாகும்:-

(அ) அப்பிரிவிலுள்ள சில பிழைகளை நிவர்த்திசெய்தல்;

(ஆ) ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்கின்ற கம்பெனிகளிலான முதலீடுகளுக்குச் சலுகை வழங்குதல்;

(இ) புத்தாக்கத்திற்கான அல்லது உயர்பெறுமதிக் கமத்தொழில் உற்பத்திப்பொருள் மீதான ஆராய்ச்சிக்கு சலுகை வழங்குதல்;

(ஈ) நியமத் திறமை அபிவிருத்திப் பயிற்சிக்கு சலுகை வழங்குதல்;

(உ) உற்பத்திப்பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காக வியாபாரக் குறியை மேம்படுத்துவதற்கு சலுகை வழங்குதல்.

**வாசகம் 8** : இவ்வாசகம், முதன்மைச்சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி, நிதிச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட அதிஈட்ட வரி மற்றும் வேறு அறவீடுகள் கழிக்கப்படுவதற்கு அனுமதி மறுப்பதற்கானதாகும்.

**வாசகம் 9** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது,-

(அ) அப்பிரிவிலுள்ள சில பிழைகளை நிவர்த்திசெய்வதற்கானதாகும்,

(ஆ) வங்கி, நிதிநிறுவனம் அல்லது குத்தகைக் கம்பெனி என்பவற்றினை ஒன்றுசேர்த்தல், கொள்ளுகை அல்லது ஒன்றிணைவு என்பவற்றின் பின்னரான நட்டங்களை முன்னெடுத்துச்செல்வதற்கு ஏற்பாடுசெய்வதற்கானதாகும்.

**வாசகம் 10** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது,-

(அ) தேசிய சிறுநீரக நிதியத்துக்கு தகைமைபெறுகின்ற கொடுப்பனவுக் கழிவின் ஏற்புடைமையை விசாலிப்பதற்கானதாகும்.

(ஆ) அப்பிரிவிலுள்ள ஒரு பிழையை நிவர்த்திசெய்வதற்கானதாகும்.

(இ) வங்கிகள், நிதிநிறுவனங்கள் மற்றும் குத்தகைக் கம்பெனிகள் என்பவற்றின் ஒன்றிணைவில் உறப்பட்ட செலவினத்தின் கழிப்பனவுக்கு ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 11** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 39ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவிலுள்ள சில பிழைகளை நிவர்த்தி செய்வதற்கானதாகும்.

**வாசகம் 12** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, சலுகையின் ஏற்புடைமையை மட்டுப்படுத்துவதற்கானதாகும்.

**வாசகம் 13** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 40இ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறானஅப்பிரிவின் சட்டப்பயனானது, ஊழியர்களின் தொழில் வருமானத்தின்மீது சலுகைரீதியிலான வரிவீதத்தை வழங்குவதற்கானதாகும்.

**வாசகம் 14** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 45ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, சீனியை உற்பத்திசெய்வதற்கான பொறுப்பு முயற்சிக்குச் சலுகைரீதியிலான வரியை வழங்குவதற்கானதாகும்.

**வாசகம் 15** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஆம் பிரிவைத் திருத்துவதுடன், இது 14ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையுடையதுமாகும்.

**வாசகம் 16** : இவ்வாசகம்,முதன்மைச் சட்டவாக்கத்தில் 48ஈ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதுடன், புதிய பிரிவானது முதலீட்டுச்சபைக் கம்பெனிகளினால் முதலீட்டுக் கட்டளைக்கற்கள் நிறைவேற்றப்படுவதற்கான காலப்பகுதியை நீடிப்பதற்கு ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 17** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 56ஈ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, பொதியிடும் பொருட்களுக்கும் மட்பாண்ட உற்பத்திப்பொருட்களுக்கும் சலுகைகளின் ஏற்புடைமையை விசாலிப்பதற்கானதாகும்.

**வாசகம் 18** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 58ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, பண்டங்களின் ஏற்றுமதிக்கான சேவைகளை வழங்குகின்ற கப்பற் சரக்கேற்றுநர்களுக்கு சலுகை ரீதியிலான வரிவீதத்தை விசாலிப்பதற்கான தாகும்.

**வாசகம் 19** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, சலுகையைக் குறித்தசில வேறு கம்பெனி களுக்கும் விசாலிப்பதாகும்.

**வாசகம் 20** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஊஎன்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவின் நோக்கத்துக்காக வரி கணிப்பிடு கின்ற முறையை மேலும் தெளிவுபடுத்துவதற்கானதாகும்.

**வாசகம் 21** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 59ஐ, 59ஒ, 59ஓ, 59ஔ மற்றும் 59க என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதுடன், புதிய பிரிவுகளின் சட்டப்பயனானது பின்வருவன வற்றுக்கானதாகும்,-

(அ) உற்பத்திசெய்கின்ற கம்பெனிகளின் விசாலிப்புக்காகச் சலுகை ரீதியிலான வரிவீதத்தை வழங்குவதாகும்;

(ஆ) ஆறாண்டுகளுக்குப் புதிய உற்பத்திசெய்கின்ற கம்பெனிகளுக்குச் சலுகை ரீதியிலான வரிவீதத்தை வழங்குவதாகும்;

(இ) 1970ஆம் ஆண்டிலிருந்து தொழிலில் இருந்துவருகின்ற உள்நாட்டு உற்பத்தியாளர் களுக்குச் சலுகை வழங்குவதாகும்;

(ஈ) ஊடுபயிர் நடுகைச் செயற்பாடுகளையும், உணவுப் பதனிடுதற் செயற்பாடுகளையும் மேம்படுத்துவதற்குச் சலுகை வழங்குவதாகும்;

(உ) பின்தங்கிய ஏதேனும் பிராந்தியத்தில் அமைந்துள்ள பொறுப்புமுயற்சிக்குச் சலுகை வழங்குவதாகும்.

**வாசகம் 22** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 61ஆம் பிரிவைத் தெளிவுபடுத்துகின்றது.

**வாசகம் 23** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 63ஆம் பிரிவைத் தெளிவுபடுத்துகின்றது.

**வாசகம் 24** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 94ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவின்கீழ் கருதப்பட்ட இலாபமாகத், தொழினுட்பச் சேவைகளுக்கான கட்டணங்களையும் ஆக்குவதற்கு ஏற்பாடுசெய்வதற்கானதாகும்.

**வாசகம் 25** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 95ஆம் பிரிவைத் திருத்துவதுடன், இது 24ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையுடையதுமாகும்.

**வாசகம் 26** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 105அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதுடன், புதிய பிரிவானது, சட்டத்தின் நோக்கங்களுக்காக இலத்திரனியல் தொடர்பாடல்களும், இலத்திரனியற் பதிவேடுகளும் பயன்படுத்தப்படுவதற்கு ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 27** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 106ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவிலுள்ள பிழையொன்றை நிவர்த்தி செய்வதற்கானதாகும்.

**வாசகம் 28** : இவ்வாசகம்,முதன்மைச் சட்டவாக்கத்தின் 107ஆம் பிரிவைத் திருத்துவதுடன், இலங்கைக் கணக்கீட்டுத் தொழினுட்பவியலர் கழகத்தின் உறுப்பினரொருவரைச் சேர்ப்பதன் மூலம் ''அங்கீகரிக்கப்பட்டகணக்காளர்'' என்பதன் வரைவிலக்கணத்தை விரிவாக்குவதற்கானதாகும்.

**வாசகம் 29** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 115ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஊழியர்களின் தனிப்பட்ட விடுதொகையை ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு அதிகரிப்பதற்கானதாகும்.

**வாசகம் 30** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 133ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவிலுள்ள சில பிழைகளை நிவர்த்தி செய்வதற்கானதாகும்.

**வாசகம் 31** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 137ஆம் பிரிவைத் திருத்துவதுடன், இது 9ஆம் வாசகத்தினாற் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையுடையதுமாகும்.

**வாசகம் 32** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 139ஆம் பிரிவை மேலும் தெளிவுபடுத்துவதற்காக அப்பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 33** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 150ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, காலாண்டு அடிப்படையில் வங்கிகளினாலும் நிதி நிறுவனங்களினாலும் விபரத்திரட்டுகள் சமர்ப்பிக்கப்படுவதனை இயலச் செய்வதற்கானதாகும்.

**வாசகம் 34** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 159ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது, அப்பிரிவின்கீழ் காலாண்டு அடிப்படையின்மீது விபரத்திரட்டுகள் கொடுத்துதவப்படுவதற்கு ஏற்பாடுசெய்வதற்கானதாகும்.

**வாசகம் 35** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 163ஆம் பிரிவைத் தெளிவுபடுத்துவதற்காக அப்பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 36** : இவ்வாசகம், முதன்மைச்சட்டவாக்கத்தின் 212ஆம் பிரிவைத் திருத்துவதுடன், வங்கிகளும், நிதிநிறுவனங்களும் மற்றும் குத்தகைக் கம்பெனிகளும் ஒன்றுசேர்க்கப்பட்ட பின்னர் அல்லது ஒன்றிணைக்கப்பட்ட பின்னர் வரியைக் கணக்கிடுவதற்காகவும் மற்றும் சட்டத்தின் நோக்கத்துக்காக இலத்திரனியல் தொடர்பாடலையும் பதிவேடுகளையும் நடைமுறைப்படுத்துவதற்காகவும் வழிகாட்டுநெறிகளை வழங்குவதற்கான ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்கின்றது.

**வாசகம் 37** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையிலுள்ள சில பிழைகளை நிவர்த்திசெய்வதற்காக அத்தகைய அட்டவணையைத் திருத்துகின்றது.

**வாசகம் 38** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஐந்தாம் அட்டவணையைத் திருத்துவதுடன், இது 20ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையுடையதுமாகும்.

**வாசகம் 39** : இவ்வாசகம், 2015, ஏப்பிரல் 1ஆந் தேதியிலிருந்து தொடங்கி சபாநாயகரினால் சான்றிதழானது புறக்குறிப்பிடப்பட்ட தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின் போது, ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்டுச் சேகரிக்கப்பட்ட வரிக்குச் செல்லுபடியாக்கலை வழங்குகின்றது.

*ச.வ.ஓ. 11/2015*

## 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1**. இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், வேறுவகையாகத் தெரிவிக்கப்பட்டாலன்றி, எல்லா நோக்கங்களுக்காகவும், 2015, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச்சட்டத்தின் 7ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2**. 2014 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 7ஆம் பிரிவானது அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பந்திக்கான (xvii) என்னும் உட்பந்தியில் ''2008 மார்ச்சு 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அல்லது 2013 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அச்சங்கத்திற்கு எழுகின்ற'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''2008 மார்ச்சு 31 ஆந்தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அச்சங்கத்திற்கு எழுகின்ற'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பந்திக்கான (lxxii) என்னும் உட்பந்தியில் ''இலங்கை பௌதீகவியல் நிறுவகம்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கை பௌதீகவியல் நிறுவகம்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

2-PL 008878 - 450 (2015/03)

*(3)* அப்பந்திக்கான (lxxiii) என்னும் உட்பந்தியில் ‘‘லயனன்வென்ட் ஞாபகார்த்த நிதியம்.’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘லயனன்வென்ட் ஞாபகார்த்த நிதியம்; அத்துடன்’’ என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

*(4)* உட்பந்தி (lxxiii) என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

‘‘(lxxiv) *1992* ஆம் ஆண்டின் *1* ஆம் இலக்க, இலங்கை நீரிழிவு நோயாளர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை நீரிழிவு நோயாளர் கழகம்’’.

**3**. *2014*ஆம் ஆண்டின் *8*ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் *8*ஆம் பிரிவானது அப்பிரிவின் *(1)*ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

*(1)* அவ்வுட்பிரிவின் (ர) என்னும் பந்தியில் ‘‘விஞ்சாத இலாபங்களும் வருமானமும்.’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘விஞ்சாத இலாபங்களும் வருமானமும்; அத்துடன்’’ என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

*(2)* அப்பிரிவின் (ர) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்ப்பதன் மூலமும்:-

‘‘(ல) அத்தகைய நோக்கத்திற்கெனக் கடன் பெறப்பட்ட நிதியங்களிலிருந்து கொடுக்கப்பட்ட கடனாக இல்லாதிருக்குமிடத்து, தொழில்தருநரினால் வட்டியின்றி அல்லது சகாயமான வட்டி வீதத்தில் வழங்கப்பட்ட அத்தகைய ஏதேனும் கடனை ஏற்பாடு செய்வதிலிருந்தான நன்மை.’’.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. 2014 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியின் உட்பந்தி (ii)இல் "2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2015, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஏஏ) பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் அல்லது நிதி நிறுவனத்தில் பேணப்பட்ட ஏதேனும் வைப்பிலிருந்து இலங்கைப் பிரசையொருவராகவுள்ளவரும், இலங்கையில் வதிபவரும் மற்றும் 2015, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கி 2015, மார்ச்சு 31 ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின் போது அறுபது வயதை அடைகின்றவருமான அல்லது 2015, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாம் நாளன்று ஐம்பத்தொன்பது வயதுக்கு மேற்பட்டவருமான எவரேனும் தனியாளுக்கு, 2015 சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கி, 2015, மார்ச்சு 31 ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கு அல்லது 2015, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்குத் திரளுகின்ற அல்லது அவ்வரிமதிப்பீட்டாண்டில் எழுகின்ற ஏதேனும் வட்டியின் அத்தகைய பாகம்;

(ஏஏ) மாதமொன்றுக்குச் செலுத்தப்பட்ட வட்டி ஐயாயிரம் ரூபாவிற்கும் குறைவாகவிருக்குமிடத்து, எவரேனும் தனியாள் அல்லது ஏதேனும் தரும நிறுவனம் ஒரு சேமிப்புக் கணக்கை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சேமிப்புக் கணக்குகளை பேணுமிடத்து, அத்தகைய தனியாளுக்கு அல்லது தரும நிறுவனத்துக்கு, 2015, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காகத் திரளுகின்ற, அல்லது அவ்வரிமதிப்பீட்டாண்டில் எழுகின்ற ஏதேனும் வட்டியின் அத்தகைய பாகம்.

இப்பந்தியின் நோக்கத்துக்காக, ''சேமிப்புக் கணக்கு'' என்பது, அதிலிருந்து பணத்தை மீளப் பெறுவதற்கான உரிமையைப் பாதிக்கின்ற ஏதேனும் நிபந்தனைக்கு அமைந்ததாயினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி மற்றும் வைப்பானது எக்காலப்பகுதிக்காகப் பேணப்படுகின்றதோ அக்காலப்பகுதியின் மீது தங்கியிராதவொரு வீதத்திலான வட்டியைக் கொண்டுள்ள கணக்கு என்று பொருளாகும்;''; அத்துடன்

(3) அப்பிரிவின் (ச) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(ஞ) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் கூட்டிணைப்புக் கடன் பிணையத்தில் 2015, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் செய்யப்பட்ட ஏதேனும் முதலீட்டிலிருந்து எவரேனும் ஆளிற்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற வட்டி அல்லது கழிவு; அத்துடன்

(ட) அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தேசிய அபிவிருத்தி முறிகளில் 2015 சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் செய்யப்பட்ட ஏதேனும் முதலீட்டிலிருந்து வெளிநாட்டில் வசிக்கின்ற வரான அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வரான, இலங்கையராகவுள்ள எவரேனும் தனியாளுக்கு எழுகின்ற அல்லது திரள்கின்ற வட்டி.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5**. 2014ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவானது அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (ஔ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தில் "செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கு இலாபம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கு இலாபம்;"என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(க) ஏலவேயுள்ள பொறுப்பு முயற்சியொன்றைப் பிரித்தல்மூலம் அல்லது மீளமைத்தல் மூலம் உருவாக்கப்பட்டதாக இல்லாததும் மற்றும் இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு குறையாத (அல்லது வேறேதேனும் நாணயத்தில் அதற்குச் சமமான தொகைக்குக் குறையாத) முதலீட்டுடனும், மற்றும் அதற்கான மதிப்பீட்டிறக்க விடுதொகைகளுக்கு 25ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான முதலாம் காப்புவாசகத்தின் (ஏ) என்னும் பந்தியின்கீழ் உரித்தாகவுள்ளதும், ஏற்றுமதிக்

காக உற்பத்திப்பொருட்களை உற்பத்திசெய்வதற்கானதும், 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்றதுமான ஏதேனும் புதிய பொறுப்புமுயற்சியின் பங்குதாரர் ஒருவருக்குச் செலுத்தப்பட்ட அத்தகைய பங்கிலாபங்கள், அத்தகைய புதிய பொறுப்பு முயற்சி எந்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்து அதன் வர்த்தகத் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்தத் தொடங்குகின்றதோ அந்த வரி மதிப்பீட்டாண்டிலிருந்து மற்றும் அவ்வரி மதிப்பீட்டாண்டை உடன் அடுத்துவருகின்ற மேலும் நான்கு வரிமதிப்பீட்டாண்டுகளிலிருந்தும் கணிப்பிடப்பட்ட காலப்பகுதியின்போது அப் புதிய பொறுப்புமுயற்சியின் அத்தகைய இலாபங்களிலிருந்தும் வருமானங்களிலிருந்தும் செலுத்தப்படுமிடத்து, ஏதேனும் பங்கிலாபம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. 2014ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (டடடட) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(டடடடட) சர்வதேச திரைப்பட அல்லது நாடக விழாவொன்றில் வெற்றியீட்டுகின்ற அளிப்பொன்றைப் பெறுகின்ற ஒரு சினிமாவை அல்லது ஒரு நாடகத்தைத் தயாரிக்கின்ற எவரேனும் தனியாளின் திரைப்படங்களினது அல்லது நாடகங்களினது தயாரிப்பிலிருந்து, அத்தகைய அளிப்பு எந்த ஆண்டில் பெறப்படுகின்றதோ அந்த ஆண்டிலிருந்து தொடங்குகின்ற வரிமதிப்பீட்டின் ஐந்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதிக்காக, 2015,ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னரான ஏதேனும் காலப்பகுதிக்கான இலாபங்களினதும் வருமானங்களினதும் ஓர் அரைவாசி;";

(2) அப்பிரிவின் (நந) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(நநந) அமெரிக்க டொலர் வைப்புக்களில் அல்லது ஏதேனும் வெளிநாட்டுப் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையில் நிரல்படுத்தப்பட்ட அமெரிக்க டொலர்களில் பெறுமதி குறிக்கப்பட்ட பிணையங்களில் 2015 சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பிற்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற இலாபங்களும் வருமானங்களும்”; அத்துடன்

(3) அப்பிரிவின் (லலலலலலலல) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(லலலலலலலலல) இலங்கையிலுள்ள ஏதேனும் தகவல் தொழில்நுட்பவியல் அல்லது தொழில் நடைமுறை வெளிமூலமளிக்கின்ற கம்பெனியின் குறிப்பிட்ட தேவைப்பாடொன்றாக அரசுரிமைப்பணம் என்றவகையாகச் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவிலிருந்து 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக, இலங்கையிலுள்ள அத்தகைய கம்பெனி அதன் அத்தகைய வர்த்தகச் செயற்பாடுகளைத் தொடங்குகின்றதான வரிமதிப்பீட்

டாண்டுக்காகவும் மற்றும் அவ் வரிமதிப்பீட்டாண்டை உடன டுத்துவரும் மேலுமொரு வரி மதிப்பீட்டாண்டுக்காகவும், இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் கம்பெனிக்கு, பங்காண் மைக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற இலாபங்களும் வருமானங்களும்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆம் பிரிவினை திருத்துதல்.

**7**. 2013ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் "உட்பந்தி (v) மற்றும் உட்பந்தி (vi) என்பவற்றை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

"(v) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட வாணிபக் கூறொன்றாக அல்லது ஏதேனும் ஹோட்டல் கட்டிடமொன்றாக (ஹோட்டல் கட்டிடத் தொகுதியொன்று உட்பட) பயன்படுத்தப்படுவதற்கென நிர்மாணிக்கப்பட்டதுமான அல்லது கொள்ளப்பட்டதுமான ஏதேனும் தகைமைபெற்ற கட்டிடம் அல்லது கூட்டாட்சி ஆதனமொன்றின் ஏதேனும் கூறு அல்லது அத்தகைய கட்டிடங்களை ஏதேனும் வர்த்தகத்தில் அல்லது வியாபாரத்தில் பயன்படுத்திய ஆளொருவரிடமிருந்து (ஏதேனும் கைத்தொழில் கட்டிடத்தொகுதி உட்பட) கொள்ளப்பட்ட ஏதேனும் கைத்தொழிற் கட்டிடம்-

(அ) 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் அத்தகைய கட்டிடத்தின் அல்லது கூறின் நிர்மாணச்செலவின் அல்லது கொள்ளல் செலவின்மீது ஆண்டொன்றிற்கு ஆறொடு மூன்றிலிரண்டு சதவீதப்படி; அல்லது

(ஆ) 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய கட்டிடத்தின் நிர்மாணச் செலவின்மீது அல்லது அத்தகைய கட்டிடத்தின் அல்லது கூறின் கொள்ளல் செலவின் மீது ஆண்டொன்றிற்கு பத்து சதவீதப்படி:";

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தின் (எ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஏ) அத்தகைய ஏதேனும் பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது உபகரணம் ஏற்றுமதிக்காக உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்வதில், 2015 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமனான தொகைக்குக் குறையாத மூலதனத்துடன் தொடங்கப் பட்டதும் மற்றும் ஏலவேயுள்ள பொறுப்பு முயற்சியொன்றைப் பிரித்தலின்மூலம் அல்லது மீள அமைப்பதன்மூலம் உருவாக்கப்பட்டதாகவில்லாததுமான, புதிய பொறுப்புமுயற்சியொன்றால் 2015 ஏப்பிறல், 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் கொள்ளப்பட்டும் பயன் படுத்தப்பட்டுமிருப்பின் பெறுமானத் தேய்வு வீதமானது கொள்ளற் செலவின் நூறு சதவீதமாதல் வேண்டும்;

(இ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான இரண்டாம் காப்புவாசகத்தில் "உட்பந்திகள் (i), (ii), (iii) அல்லது (iv) என்பனவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உட்பந்தி (i),(ii), (iii), (iv) அல்லது (v) என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஈ) அவ்வுட்பிரிவின் (ஐ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தில் அக்காப்புவாசகத்திற்கான (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(இ) ஆராய்ச்சி மீதான அத்தகைய செலவீனமானது 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் புத்தாக்கத்திற்கெனவோ அல்லது உயர்பெறுமதியுடைய விவசாய உற்பத்திப் பொருள் தொடர்பிலான ஆராய்ச்சியிலோ உறப்படுமிடத்தும், மற்றும் அத்தகைய ஆராய்ச்சியானது அத்தகைய ஆளினால் இலங்கையில் தாமாகவோ அல்லது ஏதேனும் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊடாகச் செயற்பட்டுமிருப்பின்;";

(உ) அவ்வுட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"இப்பந்தியின் நோக்கத்திற்கு ஆணையாளர் தலைமையதிபதி கழிப்பனவின் சீரான ஏற்புடைமையை உறுதிசெய்வதற்காக வழிகாட்டு நெறிகளை வழங்குதல் வேண்டும்;";

(ஊ) அப்பிரிவிற்கான (ஓ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தின் (iv) என்னும் உட்பந்தியில் ''ஊழியரின் ஊதியத்தில் சேர்க்கப்பட்டிருந் தாலன்றி அல்லது ஆணையாளர் தலைமை யதிபதியின் அபிப்பிராயப்படி'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஊழியரின் ஊதியத் தில் சேர்க்கப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய நன்மையானது 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரி வின் (த) என்னும் பந்தியின்கீழ் விலக்களிக்கப் படாமல் இருப்பின், அல்லது ஆணையாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயப்படி'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(எ) அவ்வுட்பிரிவின் (ய) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலமும்:-

''(ய) 2014, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் 32 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அத்தகைய தொகை கழிப்பனவு செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டி ருக்காதிருந்தால், 2014, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கு செலுத்தப்படற்பாலதாகவிருந்ததும் மற்றும் அத்தகைய ஆளினால் செலுத் தப்பட்டதுமான ஏதேனும் அரசுரி மைப்பணம் அல்லது நில வாடகை;

(ர) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கு கின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண் டிற்கு 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற் கல்விச்சட்டத்தின் கீழ்

தாபிக்கப்பட்ட மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவுடன் பதிவுசெய்தவரான எவரேனும் ஆளினால், அத்தகைய ஆணைக் குழுவினால் பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படுவதற்கு விதந்துரைக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தின் மூலமான நியம திறமை அபிவிருத்திப் பயிற்சியின்மீது உறப்பட்ட செலவினத்தின் முந்நூறு சதவீதத்திற்குச் சமமான தொரு தொகை;

(ல) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளினால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திப்பொருட்களின் ஏற்றுமதிக்காக வியாபாரக்குறியை மேம்படுத்துவதற்காக அத்தகைய ஆளினால் உறப்பட்ட செலவினத்தின் முந்நூறு சதவீதத்திற்குச் சமனான தொரு தொகை.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக "வியாபாரக்குறியை மேம்படுத்துதல்" என்பது உள்நாட்டுப் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருள் அல்லது விளைபொருள் ஒன்றிற்கு சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு வியாபாரக்குறிப் பெயரை உருவாக்குதல் என்று பொருளாகும்.";

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் இறுதியில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"இவ்வுட்பிரிவின் நோக்கத்திற்காக "ஆள்" என்பது பங்காண்மையொன்றை உள்ளடக்கும்.";

*(3)* அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில்-

*(அ)* அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் உள்ள "மூலதனச் சொத்து" என்பதன் வரைவிலக்கணத்தில், "பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி, பொருத்திகள், இணைப்புக்கள், தட்டுமுட்டுச் சாமான்கள், பொருட்கள், சாதனம் அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பொறித் தொகுதி, எந்திரத்தொகுதி, பொருத்திகள், இணைப்புக்கள், தட்டுமுட்டுச்சாமான்கள், பொருட்கள், கணினி மென்பொருள் உட்பட்ட சாதனங்கள் அல்லது நன்மதிப்பு அல்லாத அருவச் சொத்துக்கள் அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

*(ஆ)* அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்திக்கான (iii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

"(iii) "(இதனகத்துப்பின்னர் "முதல் கூறப்பட்ட கம்பெனி" எனக் குறிப்பீடுசெய்யப் படும்) கம்பெனியொன்று-

*(அ)* தனியாளொருவரால் தனியாகவோ அல்லது ஏனையோருடன் பங்காண்மையிலோ கொண்டுநடாத்தப்படும் (மூலதனச்சொத்து உட்பட) வியாபாரத்தைப் பொறுப்பேற்பதற்கெனவும் மற்றும் அத்தகைய தனியாளினால் அல்லது பங்காண்மையால் கொண்டு நடாத்தப்பட்ட அத்தகைய வியாபாரத்தின் மூலதனச் சொத் துக்களை கொள்ளுவதற்கெனவும்; அல்லது

(ஆ) அத்தகைய வேறு பிரித்தலுக்கு, ஒன்று சேர்த்தலுக்கு அல்லது ஒன்றிணைப்புக்கு முன்னர் (இதனகத்துப்பின்னர் “இரண்டாவதாகக் கூறப்பட்ட கம்பெனி” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய கம்பெனிகள் ஒவ்வொன்றினாலும் தனித் தனியாக அத்தகைய வியாபாரங்கள் கொண்டுநடாத்தப்படுமிடத்து, 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டத்தின் நியதிகளின்படி தேவைப் படுத்தப்பட்டவாறு நீண்டகாலக் காப் புறுதி மற்றும் பொதுக்காப்புறுதி வியா பாரத்தை வேறு பிரிப்பதற்காகவும் அல்லது ஆணையாளர் தலைமையதி பதியால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறி களில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனை களுக்கமைவாக இலங்கை மத்திய வங்கி யின் வழிகாட்டுநெறிகளின்கீழ் ஏதேனும் வங்கியின், நிதி நிறுவனத்தின் அல்லது குத்தகைக் கம்பெனியின் ஒன்றுசேர்த் தலுக்கென, கொள்ளுதலுக்கென அல்லது ஒன்றிணைப்புக்கென,

கூட்டிணைக்கப்பட்டிருக்குமிடத்து, முதலாவ தாகக் கூறப்பட்ட கம்பெனியால் கொள்ளப்பட்ட மூலதனச் சொத்து ஒவ்வொன்றினதும் கொள்ளு தல் செலவானது, அத்தகைய மூலதனச் சொத்தை அத்தகைய தனியாள், பங்காண்மை அல்லது இரண்டாவதாக கூறப்பட்ட கம்பெனி கொள்ளு வதற்கான செலவிலிருந்து அத்தகைய சொத்துத் தொடர்பில் அளிக்கப்பட்ட பெறுமதி மதிப்பிறக் கத்துக்கான ஏதேனும் விடுதொகையைக் கழித்த தன் பின்னரான தொகையெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், முதலாவதாகக் கூறப் பட்ட கம்பெனி அத்தகைய மூலதனச்சொத்தைக் கொள்ளுகின்ற தேதியானது, அத்தகைய தனி யாளினால், பங்காண்மையால் அல்லது கம்பெனி யால் அத்தகைய மூலதனச் சொத்துக் கொள்ளப் பட்ட தேதியாகக் கருதப்படுதலும் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவினை திருத்துதல்.

**8**. 2014ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவு அப்பிரிவிற்கான (1)ஆம் உட்பிரிவில் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியில்-

(அ) அப்பந்தியின் உட்பந்தி (v) இல் ''நிதிச் சேவைகள் மீதான ஏதேனும் சேர் பெறுமதி வரி; அல்லது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''நிதிச் சேவைகள் மீதான ஏதேனும் சேர் பெறுமதி வரி அல்லது 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்ட நிதிச் சேவைகள் மீதான நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி; அல்லது'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (vii) என்னும் உட்பந்தியில் "சமூகப் பொறுப்புடமை." என்னும் சொற்களுக்குப் பதிலாக "சமூகப் பொறுப்புடமை; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அப்பந்தியின் (vii) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(viii) 2015ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் விதிப்பனவு செய்யப்பட்டு அறவிடப்பட்ட ஏதேனும் அதி ஈட்ட வரி, மதுச்சாலைகள் மற்றும் தவறணைகள் அறவீடு, சீட்டாட்டத் தொழில் அறவீடு, செல்லிடத் தொலைபேசி தொழிற்படுத்துநர் அறவீடு,செய்மதியூடாக வீட்டுக்கு நேரடிச் சேவைகளை வழங்குதல் அறவீடு, செய்மதி அமைவிட அறவீடு, அர்ப் பணிக்கப்பட்ட விளையாட்டுக்கள் அலைவரிசை அறவீடு மற்றும் மாளிகை வரி"; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (க) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(க) 2014 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்குச் செலுத்தப்படற்பால தாகவிருந்தும், 32 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் பந்தி (அ) இன் கீழ் கழிப்பனவு செய்யப்படற்பாலதாகவிருந்தும் அத்துடன் 2014 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்குப் பின்னர் செலுத்தப் பட்டதுமான ஏதேனும் நில வாடகை அல்லது அரசுரிமைப்பணம் அல்லது அத்தகைய ஆளி னால் செலுத்தப்பட்ட ஏதேனும் ஆண்டுத் தொகை;".

முதன்மைச் சட்டவாக்கதின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**9**. 2014ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச், சட்டத்தால் கடைசி யாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச்சட்டவாக்கத்தின் 32ஆம் பிரிவானது, அப்பிரிவுக்கான (5) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "25 ஆம் பிரிவின்கீழ் கழிப்பனவு" என்னும் சொற்களிலும் இலக்கங்களிலும் தொடங்கி "உட்பிரிவின் (X) என்னும்" என்ற சொற்களும் இலக்கங்களும் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "25 ஆம் பிரிவின் கீழ் கழிப்பனவு செய்யப்படற்பால தல்லாத,

(i) 2014, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் கொடு படற்பாலதாகவிருந்து மற்றும் 2014, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்குப் பின்னர் செலுத்தப்பட்டதுமான ஏதேனும் நில வாடகை அல்லது அரசுரிமைப் பணம்; அல்லது

(ii) ஆண்டுத்தொகை அல்லது வட்டி,

என்றவாறு அத்தகைய ஆளினால் செலுத்தப்பட்ட பணத்தொகை.

இப்பந்தியின் நோக்கத்திற்காக வட்டியானது, 26ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ர) அல்லது (ல) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மேன்மிகையை உள்ளடக்காது:'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:-

“(ஈஈ) ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளிற் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளின் நியதிகளின்படி ஒன்றாக்கப்பட்ட, கொள்ளப்பட்ட அல்லது ஒன்றிணைக்கப்பட்ட ஏதேனும் வங்கியின், நிதி நிறுவனத்தின் அல்லது குத்தகைக் கம்பெனியின் ஏதேனும் தொழிலின் இச்சட்டத்தின்ஏற்பாடுகளின்கீழ் கழிக்கப்படற்பாலதான ஏதேனும் நட்டத்தின் மீதி, ஏதேனுமிருப்பின், அது அத்தகைய ஒன்றாக்குகைக்கு, கொள்ளுகைக்குஅல்லது ஒன்றிணைப்புக்கு முன்னர் இப்பிரிவின்கீழ் உரிமைகோரப்பட்டிருந்தாற்போன்று, இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆனால் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக, அத்தகைய ஒன்றாக்குகையின், கொள்ளுகையின் அல்லது ஒன்றிணைவின் விளைவான முறையான வங்கியின், நிறுவனத்தின் அல்லது கம்பெனியின் மொத்த நியதிச்சட்டமுறையான வருமானத்திலிருந்து தொடர்ந்தும் கழிக்கப்படுதல் வேண்டும்;”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ஆம் பிரிவினை திருத்துதல்.*

**10.** 2014ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ix) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியினைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(x) 2006 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, இலங்கை தேசிய சிறுநீரக மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் கீழ்த் தாபிக் கப்பட்ட தேசிய சிறுநீரக நிதியம்;";

(ஆ) அவ்வுட்பிரிவின் (த) என்னும் பந்தியில் "அத்தகைய பொறுப்புமுயற்சி" என்னும் சொற்களில் தொடங்கி "குறையாத முதலீடு:" என்னும் சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக அத்தகைய பொறுப்பு முயற்சி 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொழிலைக் கொண்டுநடாத்த ஆரம்பித்திருப் பின், பிரிவு 16இ அல்லது பிரிவு 17அ இன் கீழ் விலக்களிப்பதற்காக தகைமைபெற்றிருக்கும் ஏதேனும் பொறுப்புமுயற்சியின் விரிவாக்கத்தில் 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 2014, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் எவரேனும் ஆளினால் நிலையான சொத்துக்களின் கொள்வனவில் செய்யப்பட்ட ஐம்பது மில்லியன் ரூபாய்க்குக் குறையாத முதலீடு:" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (ப) என்னும் பந்தியில் ஐந்நூறாயிரம் ரூபாவை விஞ்சுமிடத்து-" என்னும் சொற்களில் தொடங்கி "இவற்றுள் எந்தத் தொகை குறைவானதோ அந்தத் தொகை;" என்னும் சொற்கள் வரையான எல்லாச் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்:-

''ஐந்து இலட்சம்ரூபாவை விஞ்சுமிடத்து அப்போது,

(i) ஐந்து இலட்சம் ரூபாவிற்கு மேலதிக மாகவுள்ள அத்தகைய இலாபங்களின் அத்தகைய பாகம்; அல்லது

(ii) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டிற்கு ஓர் இலட்சம் ரூபா மற்றும் 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா,

இவற்றுள் எந்தத் தொகை குறைவானதோ அந்தத் தொகை;'';

(ஈ) அவ்வுட்பிரிவின் (ம) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:-

''(ம) இலங்கைப் பிரசையல்லாத ஒருவரும் இலங்கையில் வதிவில்லாதவருமான எவரேனும் தனியாளுக்கு, இலங்கையில் எழுகின்ற உத்தியோகபூர்வ வேதனாதி களின் -

(i) 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன் னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு, ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத அத்தகைய பாகம்; அல்லது

(ii) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத அத்தகைய பாகம்;";

(உ) அவ்வுட்பிரிவின் (ர) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:-

"(ர) அந்நோக்கத்திற்காக இலங்கை மத்தியவங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கிணங்க விடயத்திற்கு விடயமான அடிப்படையில் எல்லா நிகழ்வுகளையும் கருத்திற் கொள்வதன்மூலம் அந்நோக்கத்திற்கென ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட முறையில் அத்தகைய செலவு நிச்சயிக்கப்படுகின்றவிடத்து, வேறு ஏதேனும் வங்கியின் அல்லது வேறு ஏதேனும் நிதி நிறுவனத்தின் அல்லது வேறு ஏதேனும் குத்தகைக் கம்பெனியின் கொள்ளுதல் அல்லது ஒன்றிணைவுச் செலவு என்ற வகையாக ஏதேனும் வங்கியால் அல்லது ஏதேனும் நிதி நிறுவனத்தினால் அல்லது ஏதேனும் குத்தகைக் கம்பெனியினால் உறப்பட்ட ஏதேனும் செலவினம்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ix) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(X) (2) ஆம் உட்பிரிவின் (ர) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் தகைமை பெறும் கொடுப்பனவு தொடர்பில் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டில் அப்பந்தியிற் குறிப்பீடுசெய்யப் பட்ட ஏதேனும் வங்கியினால் அல்லது வேறு கம்பெனியினால் உறப்பட்ட செலவினத்தின்மீது வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தின் மூன்றிலொன்றை அல்லது முந்நூறு மில்லியன் ரூபாவை, இதில் எது கூடுதலாகவுள்ளதோ, அதனை விஞ்சுதலாகாது. அதேவரிமதிப் பீட்டாண்டில் கழிக்கப்படற்பாலதல்லாத மீதி, ஏதேனுமிருப்பின், அது முன்கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன், அதே நிபந்தனைகளுக் கமைவாக அடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டுக் காகவும் மற்றும் அவ்வாறு தொடர்ந்தும் அத்த கைய வங்கியின் அல்லது கம்பெனியின் வரி மதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து கழிக் கப்படற்பாலதாதலும் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச்சட்டவாக்கத்திற்கான 39 ஆம் பிரிவு “அரசுரிமைப்பணமாக ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கு செலுத்தப்படற்பாலதான மொத்த புனைவுரிமைத் தொகை யானது” என்னும் சொற்களுக்குப்பதிலாக “அரசுரிமைப் பணமாகச் செலுத்தப்படற்பாலதான (இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் விலக்களிக்கப்பட்ட அரசுரிமைப் பணமாக இல்லாத) மொத்த அரசுரிமைப்பணத் தொகையானது” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படு கின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**12.** 2013ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆ என்னும் பிரிவு, “இரண்டாயிரத்து ஒன்பது ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும்” என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக,“இரண்டாயிரத்து ஒன்பது ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2015, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும்” என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40இ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆ என்னும் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''2014 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று'' என்னும் சொற்களிலும் இலக்கங்களிலும் தொடங்கி ''இலாபங்களை உள்ளடக்குமிடத்தும்'' என்னும் சொற்கள் வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

''(i) 2014, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும், ஆனால் 2015, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, இலங்கைப் பிரசையாகவுள்ள எவரேனும் தனியாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், உயர்தொழிலரொருவராக அவரது கடமைகளைப் பிரயோகிக்கையில், ஊழியத்திலிருந்தான எவையேனும் இலாபங்களை உள்ளடக்குமிடத்தும்; அல்லது

(ii) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, ஊழியத்திலிருந்தான எவையேனும் இலாபங்களை உள்ளடக்குமிடத்தும்,

(இது இதனகத்துப்பின்னர் ''இயைபான இலாபங்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்)''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவினை திருத்துதல்.

**14.** 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்:-

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''ஊக்குவிப்புக்குமான ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக,''மேம்படுத்துவதற்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் ''வேலைகளுக்கான பொறுப்புமுயற்சியிலிருந்து,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''வேலைகளுக்கான பொறுப்புமுயற்சியிலிருந்து; அல்லது'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(ஈ) சீனியை உற்பத்திசெய்வதற்கான பொறுப்பு முயற்சியிலிருந்து,''; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை சேர்ப்பதன் மூலமும்:-

''(உ) ''சீனியை உற்பத்திசெய்வதற்கான பொறுப்பு முயற்சி'' என்பது கரும்பை அல்லது பீற்றை அல்லது பிரத்தியேகமாக உள்நாட்டில் பயிரிடப்பட்ட வேறு ஏதேனும் விளைபொருளைப் பயன்படுத்துவதன் மூலம் உள்நாட்டில் சீனியை உற்பத்திசெய்வதற்காகக் கொண்டு நடாத்தப்படுகின்ற ஒரு பொறுப்புமுயற்சி என்று பொருளாகும்.''.

**15**. 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்:-

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''மேம்படுத்துவதற்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து; அல்லது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''மேம்படுத்துவதற்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "வேலைக்கான பொறுப்பு முயற்சியிலிருந்து," என்னும் சொற்களுக்குப் பதிலாக "வேலைக்கான பொறுப்பு முயற்சியிலிருந்து; அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஈ) சீனியை உற்பத்திசெய்வதற்கான பொறுப்பு முயற்சியிலிருந்து,"; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஏதேனும் கமத்தொழில் பொறுப்புமுயற்சியில்" அத்துடன் "நிருமாண வேலைகளுக்கான பொறுப்புமுயற்சியில்" இருந்து என்னும் சொற்களுக்குப்பதிலாக, "ஏதேனும் கமத்தொழில் பொறுப்புமுயற்சியில்", "நிருமாண வேலைகளுக்கான பொறுப்புமுயற்சியில்" அத்துடன் "சீனியை உற்பத்தி செய்வதற்கான பொறுப்பு முயற்சியில்" இருந்து என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 48ஈ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48இ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 48ஈ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"16ஈ என்னும் பிரிவின்கீழ் அல்லது 17அ என்னும் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்ட ஏதேனும்

48ஈ. இச்சட்டத்தின் 16ஈ என்னும் பிரிவின்கீழ் அல்லது 17அ என்னும் பிரிவின்கீழ் வரிவிடுமுறையை வழங்குகின்ற 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழான உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்வதன் மூலம் இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏதேனும் புதிய பொறுப்புமுயற்சியினாலான முதலீடுகளைப் பூர்த்தி செய்வதற்கும் வர்த்தகத்

*கம்பெனி முதலீட்டு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கான காலப்பகுதியை நீடித்தல்.*

தொழிற்பாடுகளைத் தொடங்குவதற்கும் பிரிவு 16ஈ என்பதில் அல்லது 17அ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி எவ்வாறிருப்பினும், அத்தகைய உடன்படிக்கை 2014, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் செய்துகொள்ளப்பட்டும் மற்றும் தொழிலின் தன்மையைப் பொறுத்து எவையேனும் செயல்முறைக் காரணங்களின் விளைவாக 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் அவற்றின் முதலீடுகளைப் பூர்த்திசெய்வதற்கும் மற்றும் 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்குவதற்கும் இயலாதுமிருப்பின், அத்தகைய புதிய பொறுப்பு முயற்சி ஈடுபட்டுள்ள செயற்பாடுகளின் தன்மை 16ஈ என்னும் பிரிவின்கீழ் அல்லது 17 ஆ என்னும் பிரிவின் கீழ் தகைமைபெற்ற செயற்பாடுகளாக மட்டுமே உள்ளனவென ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுவதுடன், இலங்கை முதலீட்டுச் சபை, முதலீட்டாளரின் வேண்டுகோளின் பேரில், அத்தகைய நீடிப்புக்கான காரணங்கள், அத்தகைய புதிய பொறுப்புமுயற்சியின் நிலையையும் முன்னேற்றத்தையும் பரிசோதனை செய்வதன் மூலம் நியாயப்படுத்தத்தக்கது எனவும் உறுதிப்படுத்தினால், அத்தகைய காலப்பகுதியானது 2017, ஏப்பிறல் 1 ஆந் தேதி வரை நீடிக்கப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 56ஈ என்னும் பிரிவினை திருத்துதல்.*

**17**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 56ஈ என்னும் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவிலுள்ள "உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட தைத்த ஆடைகள், நெய்யப்பட்ட துணிவகைகளினால் தயாரிக்கப்பட்ட பைகள், நார்ப்பட்டு, திரைச்சீலைகள்

அல்லது வேறெவையேனும் பண்டங்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "உள்நாட்டில் உற்பத்திசெய்யப் பட்ட தைத்த ஆடைகள், நெய்யப்பட்ட துணிவகை களினால் தயாரிக்கப்பட்ட பைகள், நார்ப்பட்டு, திரைச் சீலைகள் அல்லது மட்பாண்ட உற்பத்திப்பொருட்கள்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவுக்கான காப்புவாசகத்தில் "அத்தகைய தைத்த ஆடைகளின், பைகளின், நார்ப்பட்டின், திரைச்சீலை களின் அல்லது வேறு பண்டங்களின் உள்நாட்டுப் பெறுமதி சேர்ப்பானது இலங்கை வணிகப் பெயரை அறுபத்தைந்து சதவீதத்திற்கு அதிகமாகக் கொண் டிருக்குமிடத்து, அத்தகைய தைத்த ஆடைகள், பைகள், நார்ப்பட்டு, திரைச்சீலைகள் அல்லது வேறு பண்டங்கள் என்பவற்றின்'' என்னும் சொற்களுக்குப்பதிலாக,'' அத்தகைய தைத்த ஆடைகளின், பைகளின், நார்ப் பட்டின், திரைச்சீலைகளின் அல்லது மட்பாண்ட உற்பத்திப்பொருட்களின் உள்நாட்டுப் பெறுமதி சேர்ப் பானது இலங்கை வணிகப் பெயரை அறுபத்தைந்து சதவீதத்திற்கு அதிகமாகக் கொண்டிருக்குமிடத்து, அத்தகைய தைத்த ஆடைகள், நார்ப்பட்டு, திரைச்சீலை கள் அல்லது மட்பாண்ட உற்பத்திப்பொருட்கள் என்ப வற்றின்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 58ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**18.** 2014 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசி யாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 58ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படு கின்றது:-

(1) அப்பிரிவிலுள்ள "வெளிநாட்டு நாணயத்தில் செய்யப் படுகின்றதுடன்'' என்னும் சொற்களில் தொடங்கி "வெளிநாட்டு முதல்வருக்கு வழங்குவதிலிருந்தான இலாபங்கள் மற்றும்'' என்னும் சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற் களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்:-

(2) "வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்படுகின்றதுடன்,

(i) அத்தகைய ஏற்றுமதியாளரால் ஒன்றில் நேரடியாக அல்லது ஏதேனும் ஏற்றுமதி மனை ஊடாக ஏற்றுமதி செய்யப்பட்ட அத்தகைய பண்டங்களின் உற்பத்தியில் அல்லது சேவைகளை ஏற்பாடுசெய்வதில் அத்தகைய பண்டங்களின் உற்பத்தியுடன் அல்லது சேவைகளின் வழங்கலுடன் அத்தியாவசியமாக தொடர்புபட்டவையெனக் கருதப்படக்கூடியதாகவிருக்கின்றதான எவையேனும் சேவைகளை எவரேனும் ஏற்றுமதியாளருக்கு நேரடியாக அல்லது அத்தகைய ஏற்றுமதியாளரின் எவரேனும் வெளிநாட்டு முதல்வருக்கு வழங்குவதில் இருந்தான;

(ii) ஒரு கப்பல் தொழிற்படுத்துநரின் முகவரொருவரினால் அத்தகைய முகவரின் வெளிநாட்டு முதல்வருக்கு வழங்கப்பட்ட எவையேனும் சேவைகளை வழங்குவதிலிருந்தான; அல்லது

(iii) அத்தகைய சேவைகள் பண்டங்களின் ஏற்றுமதிக்கானதாயிருக்கும் அளவுக்கு, எவரேனும் கப்பற் சரக்கேற்றுநரினால் எவையேனும் சேவைகளை வழங்குவதிலிருந்தான,

இலாபங்கள் மற்றும்"; அத்துடன்

(2) அப்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"இப்பிரிவின் நோக்கத்துக்காக "கப்பற் சரக்கேற்றுநர்" என்பது, ஒரு கப்பற் சரக்கேற்றுநராகச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் இலங்கை மத்திய வங்கியுடன் பதிவுசெய்யப்பட்டவரும் அல்லது பதிவுசெய்யப்பட்டதும்,-

(i) கப்பற் சரக்கேற்றுநர்களின் "எல்லா ஆபத்துக்களுக்கும் மற்றும் சட்டப் பொறுப்புகளுக்குமான காப்புறுதிப் பத்திரத்தினால்" காப்புறுதி செய்யப்பட்ட பல் மாதிரிப் படிவத்திலான ஆவணங்களை வழங்குகின்றவரும் அல்லது வழங்குகின்றதும்; அத்துடன்

(ii) ஏதேனும் இயைபான காலாண்டுக்காக இயைபான மொத்த விற்பனவுவரவின் விபரத்திரட்டுடன் சேர்த்து, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 29ஆ என்னும் பிரிவின்கீழ் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட அறிவிப்புக்கான மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் தயாரிக்கப்பட்ட மொத்தவிற்பனவு வரவின் அத்தகைய இயைபான காலாண்டில் அடங்கியுள்ள ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்குக் கொடுத்துதவப்பட்ட கூற்றுக்களின் பிரதிகளையும், மற்றும் அத்தகைய அறிவிப்புக்கான நான்காம், ஐந்தாம் மற்றும் ஆறாம் அட்டவணைகளில் குறித்துரைக்கப் பட்டதுமான படிவங்களில் தயாரிக்கப்பட்டனவான தேறிய சேகரிப்புக்களையும் கொடுத்துதவுகின்றவரும் அல்லது கொடுத்துதவுகின்றதும்,

ஆன ஆளொருவர் அல்லது பங்காண்மையொன்று என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கதின் 59ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**19**. 2014ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆ என்னும் பிரிவானது, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பந்தியின் உட்பந்தி (ii) இல் "2013 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "2013, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2015, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பந்தியின் உட்பந்தி (ii) ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(iii) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எழுநூற்றி ஐம்பது மில்லியன் ரூபாவை விஞ்சாததாகவுள்ள,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஊ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஊ என்னும் பிரிவு அதன் உட்பிரிவு (1) ஐ நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1) 2014 ஏப்பிரல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக இலங்கை பிரசையாகவுள்ள எவரேனும் தனியாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் (இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் ''இயைபான இலாபங்கள்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) உயர் தொழிலர் ஒருவராக உயர்தொழிற்சார் சேவைகளை வழங்குதிலிருந்தான எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் உள்ளடக்குவதுடன் (இதனகத்துப் பின்னர் "வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் ஒரு பாகத்தின் மீது இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் கீழ் செலுத்தப்படற்பாலதான வருமானவரி வீதம் பன்னிரெண்டு சதவீதத்தை விஞ்சுமிடத்து, அப்போது வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகம் தொடர்பாகச் செலுத்தப்படற்பாலதான வரி கீழே தரப்பட்டவாறாகக் கணிப்பிடப்படுதல் வேண்டும்:-

(அ) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய இயைபான பாகம் இயைபான இலாபங்களின் தொகையை விஞ்சுமிடத்து, அப்போது, வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய இயைபான பாகத்தின் மீது செலுத்தப்படற்பாலதான வரி பின்வருமாறு கணிப்பிடப்படுதல் வேண்டும்:-

(i) இயைபான இலாபங்கள் இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாதிருப்பின், அப்போது இயைபான இலாபங்களுக்குச் சமமானவாறாகவுள்ள வரிவிதிக்கப் படற்பாலதான வருமானத்தின் இயை பான பாகத்தின் அத்தகைய பகுதியின் மீதான வரி பன்னிரெண்டு சதவீதத்தில் இருத்தல் வேண்டும்; அத்துடன் வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகத்தின் மீதியின் மீதான வரி, இச்சட்டத்திற்கான முதலாம் அட்ட வணையின்கீழ் அதற்கு ஏற்புடையற்பால னவாக உள்ளவாறாகப் பன்னிரெண்டு சதவீதத்துக்கு மேற்பட்ட வீதங்களுள் அத்தகையவற்றுக்கிணங்கக் கணிப்பிடப் படுதல் வேண்டும்; அல்லது

(ii) இயைபான இலாபங்கள் இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சி, ஆனால் முப்பத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாதிருப்பின், இருபத்தைந்து மில்லியன் ரூபாவுக்குச் சமமானவாறாக வுள்ள வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகத்தின் அத்தகைய பகுதியின் மீதான வரி பன்னிரெண்டு சதவீதத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், இருபத்தைந்து மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட இயை பான இலாபங்களின் விஞ்சு தொகையின் மீது பதினான்கு சதவீதமாதலும் வேண்டும்; அத்துடன் வரிவிதிக்கப்படற் பாலதான வருமானத்தின் மீதியின் மீது செலுத்தப்படற்பாலதான வரி இச்சட்டத் திற்கான முதலாம் அட்டவணையின் கீழ் அதற்கு ஏற்புடையற்பாலனவாக உள்ள வாறாகப் பன்னிரெண்டு சதவீதத்துக்கு மேற்பட்ட வீதங்களுள் அத்தகையவற் றுக்கிணங்கக் கணிப்பிடப்படுதல் வேண்டும்; அல்லது

(iii) இயைபான இலாபங்கள் முப்பத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சுமிடத்து, அப்போது, இருபத்தைந்து மில்லியன் ரூபாவுக்குச் சமமாகவாறாகவுள்ள வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகத்தின் அத்தகைய பகுதியின் மீதான வரி பன்னிரெண்டு சதவீதத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், பத்து மில்லியன் ரூபாவுக்குச் சமமானவாறாகவுள்ள அத்தகைய பகுதியின் மீது பதினான்கு சதவீதத்தில் இருத்தலும் வேண்டும்; அத்துடன் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகத்தின் மீதியின் மீது செலுத்தப்படற்பாலதான வரி பின்வருமாறு கணிப்பிடப்படுதல் வேண்டும்:-

(அ) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய மீதி இயைபான பாகத்தின் ஒரு பகுதியின் மீது, இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் கீழான வருமான வரி வீதம் பதினாறு சதவீதத்தை விஞ்சுமிடத்து:-

- முப்பத்தைந்து மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட இயைபான இலாபங்களின் விஞ்சு தொகைக்கு மேற்படாமல் உள்ளவாறாகவுள்ள வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய இயைபான பாகத்தின் மீதான வரி பதினாறு சதவீதத்தில் கணிப்பிடப்படுதல் வேண்டும்; அத்துடன்

- வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகத்தின் ஏதேனும் மீதியின் மீதான

வரி, இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் கீழ் அதற்கு ஏற்புடையற்பாலதான பதினாறு சத வீதத்துக்கு மேற்பட்ட வீதங்களுள் அத்தகையவற்றுக்கிணங்கக் கணிப்பிடப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய மீதி இயைபான பாகத்தின் ஏதேனும் பகுதியின் மீது இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் கீழான செலுத்தப்படற்பாலதான வருமான வரி வீதம் பதினாறு சதவீதத்தை விஞ்சாதவிடத்து, அப்போது, அத்தகைய மீதியின் முழுமையின் மீதும் செலுத்தற்படற்பாலதான வரி பதினாறு சதவீதத்தில் கணிப்பிடப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய இயைபான பாகம் இயைபான இலாபங்களின் தொகையை விஞ்சாதவிடத்து, அப்போது, வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகத்தின் மீது செலுத்தப்படற்பாலதான வரி பின்வருமாறு கணிப்பிடப்படுதல் வேண்டும்:-

(i) அத்தகைய இயைபான இலாபங்கள் இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாதிருப்பின், அப்போது, வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகத்தின் முழுமையின் மீதும் செலுத்தப்படற்பாலதான வரி பன்னிரெண்டு சதவீதமாதல் வேண்டும்; அல்லது

(ii) இயைபான இலாபங்கள் இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சினால், அப்போது

- இயைபான இலாபங்கள் இருபத்தைந்து மில்லியன் ரூபாவை எத்தொகையால் விஞ்சுகின்றதோ அத்தொகைக்கு மேலான இயைபான இலாபங்களின் விஞ்சு தொகையின்பகுதியின் மீது வரியானது பன்னிரெண்டு சதவீதத்தில் இருத்தல் வேண்டும்;

- பத்து மில்லியன் ரூபா வரைக்கும் வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகத்தின் விஞ்சுதலான பகுதியின் மீது வரியானது பதின்நான்கு சதவீதத்தில் இருத்தல் வேண்டும்; அத்துடன்

- வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகத்தின் ஏதேனும் மீதியின் மீது வரியானது பதினாறு சதவீதத்தில் இருத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 59ஐ, 59ஒ, 59ஓ, 59ஔ மற்றும் 59க என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஏ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 59ஐ, 59ஒ, 59ஓ, 59ஔ மற்றும் 59க என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"மேல்மாகாணம் தவிர்ந்த ஏதேனும் மாகாணத்துக்கு அத்தகைய தொழிலின் விசாலிப்பைக் கொண்டு நடத்துகின்ற*

59ஐ. 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2017, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்குமுன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக முந்நூறு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத (காணி அல்லது கட்டிடம் அல்லாத) நிலையான சொத்துக்களின் கொள்ளுதலில் முதலீடு செய்வதன் மூலம் (ஏலவேயுள்ள

ஏதேனும் உற்பத்தி செய்யும் கம்பெனியின் இலாபங் களுக்கும் வருமானத் துக்கும் ஏற்புடையற் பாலதான வருமான வரி வீதம்.

கம்பெனியை அல்லது அதன் பாகத்தை வேறோர் இடத்துக்கு மாற்றுதல் மூலமல்லாது) மேல் மாகாணம் தவிர்ந்த ஏதேனும் மாகாணத்தில் அத்தகைய கம்பெனியின் அத்தகைய உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி செய்தலை விசாலிப்பதன் மீது, (மதுபானம் அல்லது புகையிலை தவிர்ந்த) உற்பத்திப் பொருட்களின் உற்பத்திசெய்தல் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றதும், இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையின் பாகம்-ஆ வின் 3 ஆம் விடயத்தில் குறித்துரைக் கப்பட்ட வீதத்தில் வருமான வரி செலுத்துவதற்கு உட்பட்டதாகவுள்ளதுமான ஏலவேயுள்ள கம்பெனி யொன்றின் இலாபங்களினதும் வருமானத்தின தும் மீது ஏற்புடையற்பாலதான வரி வீதம், அத்தகைய கம்பெனி எந்த வரிமதிப்பீட்டாண்டில் விசாலிப்பைத் தொடங்குகின்றதோ அந்த வரி மதிப்பீட்டாண்டுக்காகவும் மற்றும் அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப்பின்வரும் மேலும் நான்கு வரிமதிப்பீட்டாண்டுகளுக்காகவும், ஐந்நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாத ஆகக்கூடிய தொகை வரை ஐம்பது சதவீதத்தினால் குறைக்கப் படுதல் வேண்டும்.

ஏதேனும் உற்பத்தி செய்கின்ற தொழிலில் ஈடுபட்டுள்ள ஏலவேயுள்ள கம்பெனி யொன்றின் முதலீட்டின் மீதான இலாபங் களுக்கும் வருமானத் துக்கும் ஏற்புடையற் பாலதான வருமான வரிவீதம்.

59ஒ. ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஏதேனும் தன்மையினதான ஏலவேயுள்ள பொறுப்பு முயற்சியைப் பிரிவிடாமல் அல்லது மீள அமைக்காமல் (மதுபானம் அல்லது புகையிலையை அடிப்படையாகக் கொண்ட உற்பத் திப் பொருட்கள் அல்லாத) ஏதேனும் உற்பத்தி செய்கின்ற தொழிலில் செய்யப்படவேண்டிய ஐந்நூறு மில்லியன் ரூபாவை விஞ்சுகின்ற பொறுப்பிக்கப்பட்டவொரு முதலீட்டுடன் 2015, திசெம்பர் 31 ஆந்தேதியன்று அல்லது அதன் முன்னர் வரி நோக்கங்களுக்காக உண்ணாட்டர சிறைத் திணைக்களத்துடன் பதிவுசெய்யப்பட்ட

ஏதேனும் கம்பெனியின் இலாபங்களினதும் வருமானத்தினதும் மீது ஏற்புடையற்பாலதான வரி வீதம், ஏற்புடையற்பாலதான வருமான வரி வீதம் இருபத்தெட்டுச் சதவீதமாகவிருப்பின், அத்தகைய கம்பெனி எந்த வரிமதிப்பீட்டாண்டில் வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டுக்காகவும் மற்றும் அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்வரும் மேலும் ஆறு வரிமதிப்பீட்டாண்டுகளுக்காகவும் ஐம்பது சதவீதத்தினால் குறைக்கப்படுதல் வேண்டும்.

*1970ஆம் ஆண்டிலிருந்து தொழிலிலுள்ள உள்நாட்டு உற்பத்தி யாளரினால் செலுத்தற்படற் பாலதான வருமான வரி.*

59ஓ. ஆயிரத்து எழுபதாம் ஆண்டிலிருந்து உற்பத்திசெய்கின்ற தொழிலில் இருந்துள்ளவரும் இறக்குமதிகளுடன் போட்டித்தன்மையை உற்றிருந்தவருமான எவரேனும் உற்பத்தியாளரினால் செலுத்தற்படற்பாலதான, 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக, இச் சட்டத்திற்கிணங்கக் கணிப்பிடப்பட்ட வரியின் அத்தகைய பாகம், இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறு இருப்பினும்,அத்தகைய விற்பனைகளின் மீதான இலாபத்தின் மீது இருபத்தெட்டுச் சதவீதம் என்ற ஆகக் கூடிய வீதத்தில் வரிக்கு அமைந்ததாகவுள்ள உள்நாட்டுச் சந்தையில் (மதுபானம் அல்லது புகையிலையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள் தவிர்ந்த) அத்தகைய உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள் மீது செய்யப்பட்ட விற்பனைகளிலிருந்தான இலாபங்களினதும் வருமானத்தினதும் மீது பத்து சதவீதத்தினால் குறைக்கப்படுதல் வேண்டும்.

*ஊடுபயிர் நடுகைச் செயற்பாடுகளில் அல்லது மரக்கறி மற்றும் உணவு பதனிடுதற்கு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டுத் தொழில் முதலாளி மாரினால் செலுத்தற்படற்பாலதான வருமானவரி.*

59ஔ. ஊடு பயிர் நடுகைச் செயற்பாடுகளில் அல்லது மரக்கறி மற்றும் உணவு பதனிடுதற் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள எவரேனும் உள்நாட்டுத் தொழில் முதலாளிமாரினால் செலுத்தற்படற்பாலதாக 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக இச்சட்டத்திற்கிணங்கக் கணிப்பிடப்பட்ட வரியின் அத்தகைய பாகம், அத்தகைய செயற்பாடுகளிலிருந்தான இலாபத்தினதும் வருமானத்தினதும் மீது ஐம்பது சதவீதத்தினால் குறைக்கப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கத்துக்காக:

‘‘உள்நாட்டுத் தொழில் முதலாளி’’ என்பது, இலங்கைப் பிரசையொருவராகவுள்ள ஆளொருவர் என்று பொருளாகும் என்பதுடன், எக்கம்பெனியின் அல்லது பங்காண்மையின் கட்டுப்படுத்துகின்ற அக்கறை இலங்கையரினால் வைத்திருக்கப்படுகின்றதோ அக்கம்பெனியையும் அல்லது பங்காண்மையையும் உள்ளடக்கும்;

‘‘ஊடுபயிர் நடுகைச் செயற்பாடுகள்’’ என்பது, அதே வயலில் ஒரே நேரத்தில் இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட பயிர்களைப் பயிரிடுதல் என்று பொருளாகும்;

‘‘மரக்கறி மற்றும் உணவு பதனிடுதற் செயற்பாடுகள்’’ என்பது, முப்பத்தைந்து சதவீதத்திற்கு குறையாத உள்நாட்டு சேர்பெறுமதியுடன் எவரேனுமாளினால் மரக்கறிகள் அல்லது உணவுகள் பதனிடப்படுதல் என்று பொருளாகும் என்பதுடன், இறுதி உற்பத்திப்பொருள் உள்நாட்டில் வளர்க்கப்பட்ட மரக்கறிகளின் அல்லது உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட உணவுகளின் எழுபது சதவீதத்துக்குக் குறையாததைக் கொண்டிருத்தலும் வேண்டும்.’’.

ஏதேனும் பின்தங்கிய பிராந்தியத்தில் அமைந்துள்ள பொறுப்பு முயற்சியொன்றின்மீது ஆளொருவரினால் செலுத்தற்படற்பாலதான வருமான வரி.

59க. 2015, பெப்புருவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2017, மார்ச்சு 31 ஆந் தேதிக்கு முன்னர் இருநூற்றைம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறையாதவொரு பணத் தொகையில் ஏதேனும் பின்தங்கிய பிராந்தியத்தில் அமைந்துள்ளதும், உற்பத்திக்கானதும் அல்லது சேவைகளை வழங்குவதற்கானதுமான ஏதேனும் பொறுப்புமுயற்சியில் முதலீடு செய்தவரான உற்பத்தியாளரொருவராகவுள்ள எவரேனுமாளினால் செலுத்தற்படற்பாலதாகவுள்ளதும் இச்சட்டத்திற்கிணங்கக் கணிப்பிடப்பட்டதுமான வரியின் அத்தகைய பாகம் இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய பொறுப்புமுயற்சி எந்த வரிமதிப்பாண்டில் தொழிலின் தொழிற்பாடுகளைத் தொடங்குகின்றதோ அந்த வரிமதிப்பாண்டுக்காகவும் அவ்வரிமதிப்பாண்டை உடனடுத்துப்பின்வரும் மேலும் நான்காண்டுகளுக்காகவும் அத்தகைய ஆளின் இலாபங்களினதும் வருமானத்தினதும் மீது ஐம்பது சதவீதத்தினால் குறைக்கப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கத்துக்காக ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாகப் ''பின்தங்கிய பிராந்தியம்'' என்பது ஏதேனும் பிரதேசச் செயலாளர் பிரிவு எந்தத் தோதான அதிகாரசபையின் நியாயாதிக்கத்தினுள் அடங்குகின்றதோ அந்த ஏதேனும் தோதான அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன் அமைச்சரின் அங்கீகாரத்துடனும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டவாறாகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ளதான அத்தகைய பிரிவு என்று பொருளாகும்.''.

**22.** 2011ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் உட்பந்தி (ii) இல் "அத்தகைய கம்பெனியானது முற்போந்த ஆண்டில் அந்த ஆண்டிற்கான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "25 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான முதலாவது காப்புவாசகத்தின் (ஏ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியொன்று அல்லாத, அத்தகைய கம்பெனியானது முற்போந்த ஆண்டில் அந்த ஆண்டிற்கான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 61ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**23.** 2014 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச்சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவானது, அப்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 63ஆம் பிரிவைத் திருத்துதல்.*

> "இப்பிரிவின் நோக்கத்திற்காக, இச்சட்டத்தின் 3 (அ) என்னும் பிரிவின் கீழான இலாபங்களின் பாகமாக அமைகின்ற அத்தகைய பங்கிலாபத்திலிருந்தான இலாபங்களும் வருமானமும் என்பது, பங்கிலாபங்களைப் பெறுகின்றதான அத்தகைய தொழிலிருந்தான இலாபங்களைத் தீர்மானிப்பதற்கான செலவினங்களைக் கழித்த தன் பின்னரான இலாபங்களும் வருமானமும் என்று பொருள்படும்.".

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 94ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) "அரசுரிமைப்பணங்களாவன-" மற்றும் "அரசுரிமைப் பணங்களாக," என்னும் சொற்கள் அப்பிரிவில் காணப்படுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப்பதிலாக முறையே "அரசுரிமைப் பணங்களாவன அல்லது தொழில்நுட்ப சேவைகளுக்கான கட்டணங்களாவன" மற்றும் "அரசுரிமைப் பணங்களாக அல்லது தொழில்நுட்ப சேவைகளுக்கான கட்டணங்களாக" என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''32 ஆம் பிரிவின் கீழ்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக 25 ஆம் பிரிவின் கீழ்'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

''இப்பிரிவின் நோக்கத்திற்காக ''தொழில்நுட்ப சேவைகளுக்கான கட்டணங்கள்'' என்பது, நிலையான அடிப்படையொன்றிலான தொழிலுக்கமர்த்தல் அல்லது உயர்தொழில் சேவைகள் அல்லாத, தொழில்நுட்ப அல்லது வேறு ஆளணியினரின் சேவைகள் வழங்குதல் உட்பட முகாமைத்துவ அல்லது தொழில்நுட்ப அல்லது ஆலோசனைச் சேவைக்கான பிரதிபயனாக ஏதேனும் வகையினதான கொடுப்பனவு என்று பொருளாகும்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 95 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**25**. 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 95 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''வாடகையாக, நிலவாடகையாக, அரசுரிமைப் பணமாக, அல்லது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக,''வாடகையாக, நிலவாடகையாக, தொழில்நுட்ப சேவைகளுக்கான கட்டணங்கள் உட்பட அரசுரிமைப் பணமாக, அல்லது'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (அஅஅ) என்னும் பந்தியில் ''கழிப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''கழிப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில் ''கொடுக்கப்பட்ட ஏதேனும் வட்டிக்கு ஏற்புடையனவாதலாகாது.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''கொடுக்கப்பட்ட ஏதேனும் வட்டிக்கு ஏற்புடையனவாதலாகாது; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(இ) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக, ஏதேனும் வங்கியில் அல்லது நிதி நிறுவனத்தில் வைப்பிலிடப்பட்ட பணத்தின் மீது எவரேனும் தனியாளுக்கு ஏதேனும் வட்டி செலுத்தப்பட்டும் அத்துடன் இப்பிரிவின் 133 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அத்தகைய வட்டி மீது வரியானது இரண்டரை சதவீதத்தால் கழிக்கப்படற்பாலதாகவிருந்தால், அதிலிருந்து கழிப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 105 ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**26**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 105 அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 105 ஆ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

''இலத்திரனியல் தொடர்பாடல்கள் அல்லது இலத்திரனியல் பதிவேடுகள் பயன்படுத்தப்படுதல்.

ஆ.(1) 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் 8 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் தொடர்பில், ஆணையாளர் தலைமையதிபதியின் விதப்புரையின் மீது அமைச்சரானவர், இலத்திரனியல் தொடர்பாடலின் அல்லது இலத்திரனியல் பதிவேடுகளின் பயன்பாட்டுக்கு அதிகாரமளிக்கின்ற அல்லது வசதியளிக்கின்ற நோக்கத்திற்கென ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) விபரத்திரட்டுகளைக் கோப்பிடுகின்றதில், தகவலையும் ஆவணங்களையும் சமர்ப்பிக்கின்றதில் இலத்திரனியல் வழிவகைகளை ஏற்புடையதாக்கும் நோக்கத்திற்காக, சட்டத்தின் இயைபான பிரிவுகள், அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடக்கூடியவாறான அத்தகைய தேதியன்று வலுவிற்கு வருமாறு, பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-

(அ) 28(4), 36(2) (ஆ), 71(1), 73(1), 76(3), 95(2), 104(2),104 அ(2), 111, 112, 118, 119, 122, 125(1), 130, 133, 162, 163, 165 மற்றும் 177 என்னும் பிரிவுகளில்,''எழுத்தில்'' என்னும் சொல் அப்பிரிவுகளில் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ, அங்கெல்லாம் அச்சொல்லுக்குப் பதிலாக "எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிமூலம்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) பிரிவுகள் 106 மற்றும் 107 என்பவற்றில், அப்பிரிவுகளுக்காக விபரத் திரட்டுகளைக் கோப்பிடுதல், தகவல் அல்லது ஆவணங்கள் சமர்ப்பித்தல் தொடர்பில் ''எழுத்தில்'' என்னும் சொல் எங்கெல்லாம் எழுகின்றதோ, அங்கெல்லாம் அச்சொல்லுக்குப் பதிலாக ''எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிமூலம்'' என்னும் சொற்களை முறையே இடுவதன் மூலமும்;

(இ) 107 ஆம் பிரிவில் அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் ''வர்த்தமானியில் வெளியிடப்படும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''வர்த்தமானியில் அல்லது உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அலுவலக ரீதியான இணையத்தளத்தில்'' என்னும் சொற்களை முறையே இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**27.** 2014 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தில் ''பத்து சதவீதப்படி வருமானவரி கழிப்பனவு செய்யப்பட்டுள்ளதோ'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''கழிப்பனவு செய்வதற்கான நோக்கத்திற்கென குறித்துரைக்கப்பட்ட விதத்தில் வருமானவரி கழிப்பனவு செய்யப்பட்டதோ'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**28.** 2014 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அஅ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலம் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

''(அஅ) 2014, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக ''அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்''; என்பது,

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர்கள் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவுள்ள கணக்காளரொருவர் ; அல்லது

(ii) *அதனது ஆண்டு மொத்த விற்பனைவரவு ஐந்நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாததும் மற்றும் அதற்கு அதன் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் இலங்கை நிதியியல்சார் அறிக்கையிடல் நியமங்கள் (எஸ் எல் எவ் ஆர் எஸ்) மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல் கே ஏ எஸ்) என்பவற்றைக் கொண்டமைந்த இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பின்பற்றுகை கட்டாயமாக்கப்படாததுமான நிறுவனமொன்றின் விடயத்தில், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ்க் கூட்டிணைக்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டுத் தொழிநுட்பவியலாளர் கழகத்தின் உறுப்பினரொருவராகவுள்ள ஒரு கணக்காளர்,*

*என்று பொருளாகும்;''.*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***29**. 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அதன்* (i) *ஆம் உட்பந்திக்காக பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன் மூலம் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-*

''(i) *(அ) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டிற்கு, மாதமொன்றிற்கு ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் கூடுதலான அல்லது ஆண்டொன்றிற்கு ஆறு இலட்சம் ரூபாவுக்குக் கூடுதலான; அல்லது*

*(ஆ) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டிற்கு, மாதமொன்றிற்கு அறுபத்தி இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவுக்குக் கூடுதலான அல்லது ஆண்டொன்றிற்கு ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு கூடுதலான,*

*ஊதியத்தைப் பெறும் எவரேனும் தனியாளை;''.*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 133ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**30.** 2014 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 ஆம் பிரிவு அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில்-

(அ) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் ''செய்யப் படுதல் வேண்டும்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''செய்யப்படுதல் வேண்டும்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் ''ஏதேனும் தரும நிறுவனமல்லாத ஏதேனும் பங்குடைமை யாக'' என்னும் சொற்களுக்குப் பதிலாக,''2015, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கு கின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஏதே னும் தரும நிறுவனமல்லாத ஏதேனும் பங்காண் மையாக'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் இறுதியில் பின்வரும் புதிய உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(iii) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஏதே னும் பங்காண்மையாக, தரும நிறுவன மாக அல்லது எவரேனும் தனியாளாக இருக்குமிடத்து கழிப்பனவானது, அத்த கைய வட்டியின் இரண்டரைச் சதவிதம் என்ற வீதத்தில் செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(iv) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஆட்கள் குழுவாகவிருக்குமிடத்து கழிப்பனவானது, அத்தகைய வட்டியின் எட்டு சதவீதம் என்ற வீதத்தில் செய்யப்படுதல் வேண்டும்;";

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக," என்னும் சொற்களுக்குப் பதிலாக "2015, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக," என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் உட்பந்தியில் "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கான அவரது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான அவரது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "தனியாளொருவராக இருக்குமிடத்து, அத்தகைய வட்டியின் எட்டு சதவீதம் என்ற வீதத்தில் கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்:" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தனியாளொருவராகவிருக்குமிடத்து, 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக, அத்தகைய வட்டியின் எட்டு சதவீதம் என்ற விதத்தில் கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்:" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 137ஆம் பிரிவைத் திருத்துதல்.

**31.** 2014 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 137 ஆம் பிரிவானது அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"(4) விடயத்திற்கேற்ப, வேறு பிரித்தலுக்கு முன்னர் ஏதேனும் காப்புறுதித் தொழிலினால், அல்லது கொள்ளப்பட்ட, ஒன்று சேர்க்கப்பட்ட அல்லது ஒன்றிணைக்கப்பட்ட ஏதேனும் வங்கியால், நிதி நிறுவனத்தால் அல்லது குத்தகைக் கம்பெனியால் கோரப்படுவதற்கு உரித்துடையதான நடைமுறையிலிருக்கின்றதான வரிவரவின் ஏதேனும் மீதித் தொகையானது, இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், (ஒரு காப்புறுதித் தொழிலாக) அத்தகைய வேறு பிரித்தல் அல்லது அத்தகைய வங்கியின், நிதிநிறுவனத்தின் அல்லது குத்தகைக் கம்பெனியின் கொள்ளுதல், ஒன்று சேர்த்தல் அல்லது ஒன்றிணைத்தல் ஏற்பட்டிருக்கவில்லை என்றாற்போன்ற நிபந்தனைகளுக்கமைவாக, அனுமதிக்கப்படற்பாலதான கழிப்பனவொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**32.** 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச்சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் புதிய பிரிவை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

"(1)(அ) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக, எந்த ஆளுடைய அல்லது பங்காண்மையின் வட்டியிலிருந்து ஒரு வங்கியால் அல்லது நிதி நிறுவனத்தினால், அல்லது 133 ஆம் பிரிவின் 135 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏதேனும் கூட்டிணைப்புத் தனிசுப் பிணயத்தை வழங்குகின்றதான ஒரு கம்பெனியினால் வருமானவரி

*கழிபடற்பாலதாகவுள்ளதோ அந்த ஆளெவரும் அல்லது பங்காண்மை எதுவும், ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, விடயத்திற்கேற்ப, அத்தகைய வட்டி வருமானம் அத்தகைய ஆளின் வரிமதிக்கப்படற்பாலதான வருமானத்தின் பாகமாக அல்லது அத்தகைய பங்காண்மையின் பிரிவிடற்பாலதான இலாபத்தின் அல்லது வருமானத்தின் பாகமாக இருந்து, அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் அல்லது இயைபான பங்காளர்களினால் செலுத்தப்படற் பாலதான வருமான வரியின் தொகையானது பிரிவு 133 அல்லது பிரிவு 135இன் கீழ் அந்த வரிமதிப்பீட்டாண்டில் கழிபடற்பாலதான வருமானத்தை விடக் குறைவானதாக இருந்தால், ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும், அத்தகைய விபரங்களைக் கொண்டதாகவும் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கான வருமானவரிக் கொடுப்பனவில் அவசியமான சீராக்கங்களைச் செய்யும்படி அந்த வங்கிக்கு அல்லது அந்த நிதி நிறுவனத்திற்கு அல்லது கூட்டிணைப்புத் தனிசுப் பிணையத்தை வழங்குகின்ற ஏதேனும் கம்பெனிக்கு பணிப்பொன்று வழங்கப்பட வேண்டுமென ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்ப மொன்றைச் செய்யலாம்; அத்துடன்*

(ஆ) *2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்காக, ஒரு தனியாள் அல்லது பங்காண்மையொன்று அல்லாத, எந்த ஆளுடைய வட்டியிலிருந்து ஒரு வங்கியால் அல்லது நிதி நிறுவனத்தினால், 133 ஆம் பிரிவின் ஏற்பாடு களுக்கிணங்க வருமானவரி கழிபடற்பாலதாக வுள்ளதோ அந்த ஆளெவரும், ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு, அத்தகைய வட்டி வருமானம் அத்தகைய ஆளின் வரிமதிக்கப்படற்பாலதான வருமானத்தின் பாகமாக இருந்து, அத்தகைய*

வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற் பாலதான வருமான வரியின் தொகையானது பிரிவு 133 இன் கீழ் அந்த வரிமதிப்பீட்டாண்டில் கழிபடற்பாலதான வருமானத்தை விடக் குறைவானதாக இருந்தால், ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும், அத்தகைய விபரங்களைக் கொண்டதாகவும் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கான வருமான வரிக் கொடுப்பனவில் அவசியமான சீராக்கங்களைச் செய்யும்படி அந்த வங்கிக்கு அல்லது அந்த நிதி நிறுவனத்திற்கு பணிப்பொன்று வழங்கப்பட வேண்டுமென ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 150ஆம் பிரிவைத் திருத்துதல்.

**33.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 150 ஆம் பிரிவு,"அத்தகைய கழிப்பனவுகள் தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்ட மாதாந்த அடிப்படை ஒன்றின்மீது ஆணையாளர் தலைமையதிபதிக்கு விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக,

"அத்தகைய கழிப்பனவுகள் தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்ட விபரத்திரட்டொன்றை-

(அ) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக மாதாந்த அடிப்படை ஒன்றின் மீதும்; அத்துடன்

(ஆ) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக காலாண்டு அடிப்படை ஒன்றின் மீதும்,

ஆணையாளர் தலைமையதிபதிக்கு கொடுத்துதவுதல் வேண்டும்." என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அத்தகைய நடவடிக்கை தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்ட மாதாந்த அடிப்படை மீதான விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவுதலும் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக,

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 159ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"அத்தகைய நடவடிக்கை தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய விபரங்களைக்கொண்ட விபரத்திரட் டொன்றை–

(அ) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கு கின்ற வரிமதிப்பீட்டாண்டிற்காக மாதாந்த அடிப்படை ஒன்றின் மீதும்; அத்துடன்

(ஆ) 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டிற்காக காலாண்டு அடிப்படை ஒன்றின் மீதும்,

ஆணையாளர் தலைமையதிபதிக்கு கொடுத்துதவுதல் வேண்டும்." என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**35.** 2014 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவானது அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் அவ்வுட் பிரிவுக்கான முதலாவது காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"ஆயின், இவ்வுட்பிரிவுள்ளதெதுவும், பின்வருவனவற்றின் விளைவாக ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் எவரேனு மாளினால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியை மதிப்பீடு செய்வதற்கு ஏற்புடையதாதலாகாது:-

(i) அவ்வரிமதிப்பீட்டாண்டுக்காக அவ் ஆளின் தொழிலிருந்தான இலாபங்கள் தொடர்பாக அத்தகைய ஆளினால் எவையேனும் நிலுவைகள் பெறப்படுதல்;

(ii) இலங்கை நிதிசார் அறிக்கையிடுதல் நியமங்கள் எந்த வரிமதிப்பீட்டாண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டனவோ அந்த வரிமதிப்பீட்டாண்டிற்காக அத்தகைய ஏற்றுக் கொள்ளுதலுக்கு இணங்கச் செய்யப்பட்ட ஏதேனும் சீராக்கலின்; அல்லது

(iii) (அ) எவரேனுமாளின் 104 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களும் வருமானமும் அல்லது நட்டம், எட்டிய விலையைக் கருத்திற் கொண்டு நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லையென்றும், அத்தகைய வரிமதிப்பீட்டின் வழங்குகை, இலங்கை அரசாங்கத்துக்கும் அத்தகைய ஆள் எந்த ஆள்புலத்தில் வதிகின்றாரோ அந்த ஆள்புலத்தின் அரசாங்கத்துக்கும் இடையே இரட்டை வரிவிதிப்புக்கான நிவாரணமளிப்பதற்காக வலுவிலுள்ள உடன்படிக்கையொன்றின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு முரணானதல்லவென்றும், அல்லது

(ஆ) எவரேனுமாளின் 104 அ என்னும் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இலாபங்களும் வருமானமும் அல்லது நட்டம், எட்டிய விலையைக் கருத்திற்கொண்டு நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லையென்றும்,ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய விபரத் திரட்டு பெறப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுகள் முடிவதற்குமுன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக, 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக, விடயத்திற்கேற்ப, 104 ஆம் பிரிவில் அல்லது 104 அ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க நிச்சயிக்கப்பட்ட எவையேனும் இலாபங்களும் வருமானமும் அல்லது நட்டம்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 212ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**36.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 212ஆம் பிரிவு அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் ''கணிப்பீடு செய்யும் முறை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''கணிப்பீடு செய்யும் முறை;''என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(ஊ) இச்சட்டத்தினதும் ஆணையாளர் தலைமையதிபதியால் நிர்வகிக்கப்படுகின்ற வேறு சட்டங்களினதும் நோக்கத்திற்காக, ஏதேனும் வங்கியின், நிதி நிறுவனத்தின் அல்லது குத்தகைக் கம்பெனியின் கொள்ளுகை அல்லது ஒருங்கிணைத்தல் செலவு தொடர்பில் தகைமை பெறும் கொடுப்பனவைக் கணிப்பீடு செய்தல் மற்றும் விடயத்திற்கேற்ப, கொள்ளலின், ஒருங்கிணைப்பின் அல்லது ஒன்று சேர்த்தலின் பின்னரான வரியின் பொதுவான நிலைமையின் தொடர்ந்திருக்கின்றமை என்பவற்றிற்கான வழிகாட்டு நெறிகள்;

(எ) ஆணையாளரினால் நிருவகிக்கப்படுகின்ற சட்டங்கள் தொடர்பில் இலத்திரனியல் தகவல் தொடர்பாடலின் அல்லது இலத்திரனியல் பதிவேடுகளின் நடைமுறைப்படுத்தல்களுக்கான விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிகள்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**37.** 2014 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்அட்டவணைக்கான பாகம் - ஆ என்பதன் விடயம் (3) இல் ''ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பு முகாமைக் கம்பெனிக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஏதேனும் கூறு நம்பிக்கைப்பொறுப்புக் கம்பெனிக்கு ஏதேனும் கூறு நம்பிக்கைப்பொறுப்பை முகாமை செய்வதிலிருந்தான'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்அட்டவணைக்கான பாகம் - ஆ என்பதன் விடயம் (1) (இ) என்பதில்,“2011, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு-” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “2011, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2014, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு-” என்னும் சொற்களையும் இலக்கங்களையும் மற்றும் “ஏதேனும் பொருளை உற்பத்திசெய்வதில் அல்லது ஏதேனும் சேவையை வழங்குவதில் ஈடுபட்டிருக்கின்ற ஏதேனும் கம்பெனியின்” என்னும் சொற்களுக்கு பதிலாக “ ஏதேனும் கம்பெனியின்” என்னும் சொற்களையும் முறையே இடுவதன் மூலமும்;

(3) அவ் அட்டவணைக்கான பாகம்-ஆ என்பதன் விடயம் (ஈ) என்பதில் “2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2014, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு” என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக “2014 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு,” என்னும் சொற்களையும் மற்றும் “ஏதேனும் பொருளை உற்பத்தி செய்வதில் அல்லது ஏதேனும் சேவையை வழங்குவதில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பெனி தவிர்ந்த ஏதேனும் கம்பெனியின்” என்னும் சொற்களுக்குப் பதிலாக ஏதேனும் கம்பெனியின்” என்னும் சொற்களையும் முறையே இடுவதன் மூலமும்.

**38.** 2014 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் ஐந்தாம் அட்டவணையானது அதன் 46 ஆம் விடயத்தை நீக்கம் செய்வதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் ஐந்தாம் அட்டவணையைத் திருத்துதல்.*

*செல்லுபடியாக்குதல்.*

**39**. *அச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் ஏற்புடைமையின் பயனைக் கொண்டு, ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பாக, 2015, ஏப்பிறல் 1 அந் தேதியில் தொடங்கி இச்சட்டம் தொடர்பில் சபாநாயகர் சான்றுரை எழுதிய தேதியில் முடிகின்ற காலப்பகுதியின்போது எவரேனும் ஆளிடமிருந்து அறவிடப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட வரித் தொகையானது, எல்லா நோக்கங்களுக்காகவும் ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பாக அத்தகைய வரியை அறவிட்ட அல்லது சேகரித்த அத்தகைய ஆளினால் இச்சட்டத்தின் கீழ் செல்லுபடியுள்ளதாகவும் மற்றும் சட்ட முறையாகவும் அறவிடப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட வரித் தொகை எனக் கருதப்படுதல் வேண்டும்:*

*ஆயின், மேற்சொல்லப்பட்ட ஏற்பாடு அத்தகைய காலப் பகுதியின்போது அறவிடப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட ஏதேனும் வரி தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் தீர்மானத்தை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் தீர்க்கப்படாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக் கைகளைப் பாதித்தல் ஆகாது.*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**40**. *இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்